செ.வெ.எண்: 24/2021 நாள்:10.08.2021

**நரிக்குறவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது தொடர்பான விழிப்புணர்வு முகாம் நடத்துதல் குறித்து திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.எஸ்.வினீத், இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!**

திருப்பூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு நரிக்குறவர் நல வாரியத்தின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (நரிக்குறவர்)வகுப்பினை சேர்ந்த மக்கள் நரிக்குறவர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்படும் கீழ்க்கண்ட நலத் திட்ட உதவிகள் பெற்றுக்கொள்ளுமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.சு.வினீத், இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**<u>நரிக்குறவர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் விவரம்:</u>**

| **வ.எண்** | **நலத்திட்டத்தின் பெயர்** | **தொகை (ரூ)** |
|---|---|---|
| 1 | **விபத்து ஈட்டுறுத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை** | |
| | அ. விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | 1,00,000/- |
| | ஆ.விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000 முதல் 1,00,000/- |
| 2 | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | 20,000/- |
| 3 | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | 5,000/- |
| 4 | **கல்வி உதவித்தொகை** | |
| | அ. 10-ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/- |
| | ஆ.10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000/- |
| | இ. 11-ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/- |
| | ஈ. 12-ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500/- |
| | உ. 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | 1,500/- |
| | ஊ. முறையான பட்டப்படிப்பு | 1,500/- |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பு | 1,750/- |
| | எ. முறையான பட்ட மேற்படிப்புக்கு | 4,000/- |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | 5,000/- |
| | ஏ. தொழிற்கல்வி பட்டபடிப்புக்கு | 4,000/- |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டபடிப்பு | 6,000/- |
| **வ.எண்** | **நலத்திட்டத்தின் பெயர்** | **தொகை (ரூ)** |
| | ஐ.தொழிற்கல்வி பட்டடிமேற்படிப்புக்கு | 6,000/- |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி | 8,000/- |

| | | |
|---|---|---|
| | பட்ட மேற்படிப்பு | |
| | ஓ. ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | **1,000/-** |
| | மாணவர் இல்ல வசதியுடன் ஐடிஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | **1,200/-** |
| | ஔ. 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவிகளுக்கு மாதம் ரூ.50/- வீதம் 10 மாதங்களுக்கு | **5,00/-** |
| | அஅ. 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவிகளுக்கு மாதம் ரூ.100/- வீதம் 10 மாதங்களுக்கு | **1,000/-** |
| **5** | திருமண உதவித்தொகை | **2,000/-** |
| **6** | **மகப்பேறு உதவித்தொகை** | |
| | அ. மகப்பேறு : மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் | **6,000/-** |
| | ஆ. கருச்சிதைவு/கருக்கலைப்பு | **3,000/-** |
| **7** | மூக்குக் கண்ணாடி செலவுத்தொகையை ஈடு செய்தல் | **500/-** |
| **8** | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | **1000/-** |
| **9** | **தொழில் தொடங்க மானியம்** | |
| | அ. தனிநபர் தொழில் தொடங்க முழுமானியம் | **7,500/-** |
| | ஆ. குழுவாகத் தொழில் தொடங்க மானியம் | **10,000/-** தனிநபருக்கு (அல்லது) **1,25,000/-** அதிகபடசமாக குழுவிற்கு |

திருப்பூர், மாவட்ட தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு மேற்படி நலத்திட்ட உதவிகள் வழங்கும் சிறப்பு முகாம்கள் திருப்பூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறவுள்ளது.

| **வ.எண்** | **வட்டத்தின் பெயர்** | **சிறப்பு முகாம் நடைபெறவுள்ள இடம்** | **தேதி மற்றும் நேரம்** |
|---|---|---|---|
| 1. | அவினாசி | பழவஞ்சி பாளையம் | 17.08.2021 காலை 10.00 மணி முதல் பிற்பகல்1.00 மணி வரை |
| 2. | ஊத்துக்குளி | குன்னத்தூர் | 17.08.2021 பிற்பகல 2.00 மணி முதல் மாலை5.00 மணி வரை |
| 3. | பல்லடம் மற்றும் திருப்பூர் தெற்கு | நாரணாபுரம் | 18.08.2021 காலை 10.00 மணி முதல் பிற்பகல்1.00 மணி வரை |
| 4. | தாராபுரம் | அம்மாபட்டி | 18.08.2021 பிற்பகல 2.00 மணி முதல் மாலை5.00 மணி வரை |

1) மிகப்பிற்படுத்தப்பட்டோர்(நரிக்குறவர்)இனத்தவராக இருக்க வேண்டும்.
2) விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 60 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

3) புதிய நரிக்குறவர் அடையாள அட்டை பதிவு செய்ய உரிய விண்ணப்பத்தினை பெற மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் செயல்படும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்

4) மேலும், புதிய நரிக்குறவர் அடையாள அட்டை பதிவு செய்ய மேற்படி நடைபெறும் முகாம் நாட்களில் உரிய விண்ணப்பத்துடன் சாதிச்சான்று, புகைப்படம்-2, இருப்பிடச் சான்று, குடும்ப அட்டை நகல்(Smart Card), வங்கி கணக்கு புத்தக நகல், குடும்ப நபர்களின் ஆதார் அட்டை நகல் ஆகிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து புதிய நரிக்குறவர் அடையாள அட்டை பெற்றுக்கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தொலைபேசி எண்:94454 77854, மின்னஞ்சல முகவரி:dbcwotpr@gmail.com-க்கு தொடர்பு கொள்ளலாம்.

எனவே, திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கும் தகுதியுடைய மக்கள் இத்திட்டத்தினை உரிய முறையில் பயன்படுத்தி கொள்ளுமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.எஸ்.வினீத், இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**